எடுக்கப்படுகின்றன. அதையும் அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷனோடு இணைத்து செயலாக்கலாமா என்ற யோசனையையும் கவனிப்பதால் தாமதமாகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி : தலைவர் அவர்களே, பழுதுபட்ட இந்த தெளிப்பான் கருவிகளைப் பழுதுபார்ப்பதற்காக எத்தனையோ முறையிலே ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்று சொல்லியும்கூட, இன்னும் பல இடங்களிலே பழுதுபட்ட நிலையிலே இக்கருவிகள் இருக்கிற காரணத்தாலே ஒரு யூனியனுக்கு 5 ஸ்பிரேயர்ஸ் என்று சொன்னால், மேலும் 5 ஸ்பிரேயர்களை, ஸ்பேராகக் கொடுப்பதற்கு அத்தகைய ஏற்பாட்டையும் செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இப்பொழுதே, அதற்காக வேளாண்மைத் துறை மூலமாக, வாங்கப்பட்டு அதிகமாக ஒவ்வொரு யூனியனுக்கும் 4 அல்லது 5 தூவிகளும்—தெளிப்பான்களும்—கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவைகளும் வாங்கப்பட்டிருக்கின்றன. இதுவரையிலே வினியோகம் செய்யப்பட்டிருக்கும் என்று நான் கருதுகிறேன். அப்படி இல்லாமல் இருக்குமானால், என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார்களானால், அதுபற்றி உடனடியாக நடவடிக்கை எடுக்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : இந்தத் தெளிப்பான்களை எல்லாம் யாரிடத்தில் நீங்கள் வாங்குகிறீர்கள்? அவர்கள் ஏதாவது காரண்டி பீரியட் கொடுக்கிறார்களா? இத்தனை ஆண்டுக்காலத்திற்குள் ரிப்பேர் ஆனால் நாங்களே ரிப்பேர் செய்து தருகிறோம் என்று அவர்கள் சொல்கிறார்களா? அல்லது அப்படி ரிப்பேர் ஆனால் நம் தலையிலேயே கட்டுகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, முறையான வகையில், அவைகளுக்கெல்லாம் டெண்டர் கேட்கப்பட்டு, அவை சரியாக இருக்கின்றனவா என்று பார்ப்பதற்கு ஒரு குழு நியமிக்கப்பட்டு அந்தக் குழுவில் நான்—அபிஷியல் மெம்பர்களும் இருக்கிறார்கள்—அவர்கள் எல்லாம் பரிசீலனை செய்தபிறகு, வாங்கப்படுகிறது. கூட்டுறவுத்துறைகள் மூலமாக இவை செய்யப்படுகின்றன. அவைகளெல்லாம் பரிசீலனை செய்யப்பட்டு, அதற்குப் பிறகுதான் வாங்கப்படுகின்றன. வாங்கப்பட்ட உடனே பழுதுபட்டதாக நாம் பார்க்கவில்லை. பழுதுபட்ட உடனே, அவற்றைச் சரிப்படுத்த எல்லா முயற்சிகளையும் நாங்கள் செய்து வருகிறோம்.

Raising of oil plants in Kolli Hills

* 145 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of

the Government to grow essential oil plants at Kolli Hills in this State : and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) ஆம்.

(இ) சேலம் மாவட்ட ஆட்சியாளருடன் கலந்தாலோசிக்கப்பட்டு சின்கோனுத் துறையின் இயக்குநருடைய ஆய்வில் உள்ளது.

திரு. என். டென்னிஸ் : 'ஆயில் எக்ஸ்டிராக்ஷன்' செய்ய செயற் குறிப்பு அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, உதகையில் அரசுத்துறையின் சார்பாக இந்த நறுமணத் தைலங்கள் தயாரிக்கிற ஒரு தொழிற்சாலை இருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன் : சார், இதுபோன்ற தொழிற்சாலை ஏற்காட்டிலே இருக்கிறது. கொல்லிமலையிலும் ஆரம்பிக்கமுடியும். அதேபோல் பாலமலையிலும் ஆரம்பிக்க வாய்ப்பு இருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, சீரிய திட்டங்கள் இருக்கின்றன. நிதியைப் பொறுத்துதான் அங்கங்கே ஆரம்பிக்க இயலும்.

THIRU B. VENKATASWAMY : We find that more foreign exchange is earned by producing more essential oils. May I know from the Hon. Minister whether any concrete plan has been proposed so as to expand the extraction of essential oils?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, இப்பொழுது தரமான தைலம் அளிக்கக்கூடிய தொழிற்சாலை இருக்கிறது. அதை விரிவுபடுத்தவேண்டியதுதான். விரிவுபடுத்தும்போது அதற்கு வேண்டிய நிதிப்பற்றுக்குறையின் காரணமாக அது அப்படியே இருக்கிறது. விரிவுபடுத்தவேண்டிய பரிசீலனைகள் இருக்கின்றன.

திரு. ஏ. சி. நரசிம்மன் : தலைவர் அவர்களே, இந்த சின்கோனு அரசுத் துறையாக இருக்கிறது. அதை ஒரு கார்ப்பரேஷனுக மாற்றினுல், நிறைய அதற்கு வேண்டிய நிதியும் கிடைக்கும். ஆகவே, விரைவிலே சின்கோனு காப்பரேஷன் ஆரம்பிப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1973 ஆகஸ்ட் 14]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : சின்கோனா கார்பரேஷன் ஆரம்பிக்க கொள்கை அளவில் ஏற்கப்பட்டு மாதங்கள் 2 ஆகின்றன.

திரு. கு. அ. பொம்மன் : பேரவைத் தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் லத்தீப் அவர்கள் அடிக்கடி சொல்வது, ஜவ்வாது மலையில் மூலப்பொருள்கள் அதிகமாகக் கிடைக்கின்றன என்பது. ஆகவே, உதகையிலே இருப்பதைப் போல் ஜவ்வாது மலையிலும் செய்வதற்கு அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, ஜவ்வாது என்றாலே வாசனைத் திரவியம்தான். கலெக்டரிடத்திலே ஆலோசனை பெறப்பட்டு இயக்குநருடைய ஆலோசனையில் இருக்கிறது. இப்பொழுது பரிசீலனை செய்யலாம் என்று சொல்லியிருக்கிறேன்.

மேட்டூர் நகருக்கு மின் சக்தி வழங்கல்

*146 வினா—திரு. எம். சுரேந்திரன் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் நகரத்தில் மாலை வேளைகளில் வோல்டேஜ் குறைவு காரணமாக டியூப் லைட்டுகள் எரியாமலும் மற்ற பல்புகள் மங்கலாகவும் எரிவது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) & (இ) மேட்டூர் அணை-மருத்துவமனைக் குடியிருப்பில் ஒரே மின்னோட்ட நிலையில் வழங்கும் முறை மாறி இப்போது 3 மின்னோட்ட நிலையில் 4 கம்பித் தொடர்களில் மின்சாரம் வழங்கப்பட்டு மின் சுமைகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. இப்போது 'வோல்டேஜ்' நிலை திருப்திகரமாயுள்ளது.

திரு. எம். சுரேந்திரன் : மின்சார உற்பத்தி மேட்டூரிலே இருந்தும். கூட, இதுபோன்று அவ்வப்போது ஏற்படுவது அங்கே வாழ்கின்ற மக்கள் அவ்வளவு பேருக்கும் மிகவும் வேதனை அளிக்கிறது. இன்னும் அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, வேறு சில இடங்களிலே இதேபோல் நிலை இருக்கிறது. அம்மாதிரி நிலையை மாற்ற அரசு உடனே நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, வோல்டேஜ்ஜை இம்ப்ரூவ் செய்வதற்காக 'High tension capacitors'. சப்-ஸ்டேஷன்களிலே நிறுவவேண்டுமென்ற விரிவான திட்டத்தின் அடிப்படையில் எல்லாப் பகுதிகளிலும் இந்தத் திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.